Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2035 மாசி -02 14-02-2004 சனிக்கிழமை ஓசை -361

S.M கோல்ட் ஹவுஸ்
காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-48A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(ச-9205) 077-6059672



# வடக்கு கிழக்கிற்கான மனிதாபிமான உதவிகள்

# இத்தாலி சாதகமாகப் பரிசீலிக்குமென உறுதியளிப்பு

## தமிழ்ச்செல்வனிடம் இத்தாலிய அமைச்சர் வாக்குறுதி

**வடக்கு கிழக்கு மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் சாதகமான முறையில் பரிசீலிக்கப்படும் என இத்தாலிய அமைச்சர் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.**

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் வெளிவிவகார குழுவின் தலைவரும் முன்னாள் இத்தாலியப் பிரதமருமான செனற்றர் பையேறிலா புரோ வீராவைச் சந்தித்துள்ளார்.

அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு இத்தாலிய அமைச்சரவைக்குழுவையும் ரோமிலுள்ள இத்தாலியின் வெளிவிவகார கட்டடத் தொகுதியில் நேற்றுமுன் தினம் சந்தித்தது.

தற்போதைய அரசியல் நிலை யுத்தம் நடைபெற்ற வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கு மீள் குடியேற்றம், புனர்நிர்மாணம், மீள்கட்டமைப்பு என்பவற்றை மேற்கொள்வதற்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன என இத்தாலி அமைச்சர் இக்னாசியோ டிப்பாஸ் அவர்களுக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் எடுத்துக் கூறினார். அப்பொழுது வடகிழக்கு மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் வழங்குவது குறித்து சாதகமான முறையில் கருத்தில் எடுக்கப்படும் என இத்தாலிய அமைச்சர் தெரிவித்தார்.

அவருடன் இத்தாலிய வெளிவிவகார அமைச்சின் தென்ஆசியப் பிரிவுக்கான அமைச்சர் மாளியோபல்மாவுடன் பங்கேற்றார். பின்னர் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் செனற்றர் பையேறிலா புரோவீராவை செனற்மாநாட்டு அறையில் சந்தித்தார். அவருடன் செனற்தலைவர்

(8ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நாளை வன்னி திரும்புகின்றனர்

(அலுவலக செய்தியாளர்)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினர் நாளை வன்னி திரும்புகின்றனர். ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டஇக்குழுவினர் தமது விஜயத்தை முடித்துக்கொண்டு வன்னி திரும்புகின்றனர்.

கடந்த 27ஆம் திகதி வன்னியில் இருந்து புறப்பட்ட இக்குழுவினர் நோர்வே வெளிவிவகார அமைச்சர், பிரதி வெளிவிவகார அமைச்சர் உட்பட்ட வெளிவிவகார அமைச்சரக அதிகாரிகள், நோபல் சமாதான குழுத்தலைவர், நோர்வே ரொம் சோநகர அரசியல்தலைமை, சுவிஸ் வெளிவிவகார அமைச்சரக அதிகாரிகள், ஜேர்மன் அமைச்சக அதிகாரிகள், ஐரோப்பிய யூனியன் பாராளுமன்ற உறுப்பினர்கள், நெதர்லாந்து வெளிவிவகார அதிகாரிகள், சுவீடன் வெளிவிவகார அமைச்சின்

(8ஆம் பக்கம் பார்க்க)

# பொ.ஐ.மு. முன்னாள் அமைச்சர்கள் மீது 113 லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுகள்

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்க காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல்கள் தொடர்பில் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் 113 முறைப்பாடுகள் செய்யபபட்டுள்ளன.

இதில் முன்னாள் அமைச்சர்கள் சிலரும்,மாகாணசபை உறுப்பினர்களும் ஜே.வி.பி.யின்முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை அடுத்தே இந்த மாற்று குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரால் சுமத்தப்பட்டுள்ளன. இதன் போது ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணிகள், நேற்று முன்தினம் பொதுசன ஐக்கிய முன்னணியினால் செய்யப்பட்டமுறைப்பாட்டின் நகலை லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவராணபியசேன ரணசிங்கவிடம் கேட்டுள்ளார். எனினும் ஆணைக்குழுவின் இரகசிய தன்மையைப் பாதுகாக்கும் முகமாக அதனைத் தரமுடியாது என ஆணையாளர் கூறினார். அதேநேரம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு சனாதிபதியினால் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படாத நிலையில் நேற்று முன்தினமும் நேற்றும் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்ய முடியாத நிலைஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க அமைச்சர் மகிந்த விஜயசேகர தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் தமக்குஎதிராக லஞ்சஊழல்ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

# வடமேல் மாகாண சபைக்கான வேட்புமனுத்திகதி அறிவிப்பு

(கொழும்பு)

வடமேல் மாகாண தேர்தலுக்கான வேட்பு மனுக் கோரல் எதிர்வரும் 27அம் திகதி முதல் மே.5ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது.

இதற்கான அறிவித்தல் நேற்று தேர்தல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணசபை கடந்த 8ஆம் திகதி நள்ளிரவு கலைக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட படி ஏனைய மாகாண சபையின் தேர்தல்களும் ஒரே தடவையில் நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அவையும் கலைக்கப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் சனாதிபதி அதனை மீறி செயற்பட்டு விட்டார் என ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (32)

# நாம் யுத்தத்தை விரும்பவில்லை தாயக அபிவிருத்தியையே விரும்புகிறோம்

## மட்டு அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ்

(மட்டக்களப்பு)

நாம் யுத்தத்தை விரும்பவில்லை எமது தேசத்தின் அபிவிருத்தியையே விரும்புகிறோம். மக்கள் இதனை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பாடுமீன் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் எழுச்சி சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிறப்புத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறிலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தி சர்வதேச சமூகத்திற்கும் நாம் எமது நிலைப்பாட்டை தெளிவாக்கியிருக்கிறோம். எனவே நாம் யுத்தத்தை விரும்புவர்கள் அல்ல. எமது தாயக தேசத்தின் அபிவிருத்தியையே நாம் கவனம் செலுத்தி வருகிறோம் எனவே யுத்தம் எம் மீது திணிக்கப்படாது இருப்பது ஆரோக்கியமானது என சிறப்புத் தளபதி ரமேஸ் மேலும் தெரிவித்தார்.

நேற்று ஆரம்பமாகிய மக்கள் எழுச்சி சங்கம நிகழ்வு நாளை வரை நடைபெறவுள்ளது.

## - அரசியல் நிர்ணய சபை-

# இந்திராடிசில்வாவுக்கு பதவி நீடிப்பு வழங்க மறுப்பு

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் இந்திராடிசில்வாவின் பதவிக் காலத்தை 6மாத காலத்திற்கு நீடிக்குமாறு சனாதிபதி வழங்கிய பரிந்துரையை அரசியலமைப்பு சபை நிராகரித்துள்ளது. இந்திராடிசில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. இந்த நிலையில், சனாதிபதியின் பரிந்துரையை, முன்னாள் சபாநாயகர் ஜோசப்மைக்கல் பெரேராவின் தலைமையிலான அரசியலமைப்பு குழு நிராகரித்துள்ளது. எனவே மீண்டும் ஒரு முறை பொலிஸ் மா அதிபர் பதவியில் வெற்றிடம் ஏற்படும் நிலை ஏற்படும். என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

# பெற்றோல் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றிற்கு இரண்டு ரூபா ஐம்பது சதத்தினால் அதிகரிக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய புதிய விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒயிலின் விலையும் லீற்றர் ஒன்றிற்கு ஒரு ரூபாவி

(8ஆம் பக்கம் பார்க்க)

# பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தால் விடுதலை

## ஓட்டிகள் தடுத்து வைப்பு

வடமராட்சியின் இன்பருட்டி மற்றும் அதனையண்டிய கடற்பரப்பில் அத்துமீறிப்பிரவேசித்து மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையில் உள்ளூர்மீனவர்களால் பிடிக்கப்பட்டிருந்த 22 இந்திய மீனவர்களை உடன் விடுவிக்க பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் இவர்கள் அனைவரையும் அடுத்துவரும் 24மணிநேரத்தினுள் இந்தியா திரும்பக்கூடியவாறு, இந்திய கடற்படையிடம் கையளிக்கவும் அவர் பணித்துள்ளார்.

நேற்றைய தினம் உள்ளூர் மீனவர்களினால் பிடிக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களில் 25 பேர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர் அவர்களில் படகுகளின் ஓட்டிகளான மூவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரையும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# ராஜினாமாக் கடிதத்தை மிலிந்த சனாதிபதிக்கு அனுப்பினார்

(கொழும்பு)

அமைச்சர் மிலிந்தமொறகொட தனது ராஜினாமாக் கடிதத்தை சனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். ஏற்கனவே இவர் தனது ராஜினாமாவை பிரதமருக்கு அனுப்பி வைத்திருந்தார். எனினும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என சனாதிபதி நேற்று முன்தினம் அறிவித்ததை அடுத்தே நேற்று சனாதிபதிக்கு அவர் ராஜினாமாக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

மோர் றேட் வெள்ளவத்தையைச் சேர்ந்த கந்தையா ராஜேந்திரம் என்பவரது பயணப்பை தவறிவிட்டது. இதில் முக்கியமான ஆவணங்கள் உள்ளன. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். அ.யேசுதாசன் 252/3 முரசுமோட்டை பரந்தன். (4239)

### தவறிவிட்டது

காரைநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பையா ரஜீபன் ஆகிய எனது அ.அட்டை, குடும்பஅட்டை, பிறப்புஅத்தாட்சிப் பத்திரம் ஆகியன அடங்கிய கறுத்த பை புதுக்குடியிருப்பு சந்திக்கும் புது.வைத்தியசாலைக்கும் இடையில் 13.02.04. காலை 10.00 மணியளவில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் புது.ஈழநாதம் பணிமனையில் அல்லது. புது. காவல் பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (3985)

# 2002 வெள்ளப்பாதிப்பிற்குள்ளான குடும்பங்களுக்கு இறுதிக்கட்ட நிதி உதவி

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மோசமாகப் பாதிக்கப்பட்ட வீடுகளை மீளப்புனரமைக்கும் நோக்குடன் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கான நிதியுதவி சமூக சேவைத் திணைக்களத்தால் இரண்டு கட்டமாக வழங்கப்பட்டது.

இதன் இறுதிக்கட்டக் கொடுப்பனவு தலா 3500/= பணம் எதிர்வரும் 19.02.2004திகதி கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் வைத்து காலை 9.00 மணிதொடக்கம் மாலை.4.00 மணிவரை வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் சீ.சிவசொருபநாதப்பிள்ளை அறிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை உதவிப்பணத்தைப்பெற்றுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (14)

# ஊனமுற்றோருக்கு உதவுவதற்கான தொண்டர் பயிற்சி நெறி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்படும் ஊனமுற்றவர்களுக்கு உதவுவதற்கான தொண்டர் பயிற்சி நெறி நேற்றுக் காலை 9.00 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெற்றது.


கிளி/கரைச்சிப்பிரதேசச் செயலர் பொன். நித்தியானந்தம் தலைமையில் ஆரம்பமான மேற்படி பயிற்சி நெறியினை கிளி/மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

ஊனமுற்றவர்களின் ஆளுமையினையும், ஆற்றல்களையும், திறமைகளையும், வளர்த்து சமூகத்தில் அவர்களையும் சரிசமமாக வாழ வைத்தல் தொடர்பாக தொண்டர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

நேற்று முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை மேற்படி தொண்டர்களுக்கான பயிற்சி நெறி இடம்பெறவுள்ளது.

நேற்றைய பயிற்சி நெறியில் கிளி/மாவட்ட செயலக அபிவிருத்தி அலுவலர் ச.பி.அமலராசா, பூநகரி பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் பொ.சிறிதரன், கிளி.மாவட்ட செயலக எழுதுவினைஞர் சி.இராமமூர்த்தி ஆகியோர் விரிவுரைகளை வழங்கினர்.

இப்பயிற்சி நெறியில் கரைச்சிப் பிரதேச கிராம சேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 60க்கு மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர். (சோ)



# வடமராட்சி கிழக்கு பு.பு.நிறுவனத்தால் தொலை நகல், கணினி சேவைகள் ஆரம்பம்

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் வடமராட்சி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக தொலைத் தொடர்பு சேவையுடன் தொலைநகல் சேவையும் நிழற்பிரதியும் கணினிச் சேவையும் நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

காலை 10.00 மணிக்கு நிறுவன நிலையத்தில் பொதுச் சுடரினை கடற்புலிகளின் வடமராட்சிக்கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறையைச் சேர்ந்த புகழச் சந்திரன் ஏற்றி வைத்தார்.நிறுவனமண்டபத்தினை போராளி செல்வி கவிக்குயில் அவர்கள் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். தொடர்ந்தும் சிறப்புரையினை கிராமசேவையாளர் தவராசா நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் மக்கள் போராளிகள் மற்றும் காவல்துறையினர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# உந்துருளியில் பயணித்த சிறுவன் விபத்தில் சிக்கி படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

உந்துருளியில் பயணித்த சிறுவன் ஒருவரை இரு சக்கர உழவியந்திரம் மோதியதில் உந்துருளியில் பயணித்த பதிநான்கு வயதுடைய சிறுவன் படுகாயமடைந்த நிலையில் கிளி.மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பெற்று சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஏ.9 நெடுஞ்சாலைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விபத்துச் சம்பவம் குறித்த விசாரணைகளை தமிழீழ காவல் துறை வீதிப் போக்கு வரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

# திருமலையில் டெங்கினால் பாதிப்புற்ற 11 பேர் இனங்காணப்பட்டனர்

(திருகோணமலை)

திருகோணமலை வைத்திய சுகாதாரபிரிவிற்குள்டெங்குக் காய்ச்சலுக்காளாகியதாகச் சந்தேகிக்கப்படும் பதினொரு பேர் அடையாளங் காணப்பட்டுள்ளனர். டெங்குக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களில் ஒருவருக்குமரணம்சம்பவித்துள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி றொஹான் பிரசாந்த் தெரிவித்தார். திருமலை நகரில் வேகமாக டெங்கு பரவிவருவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாகாணசுகாதார வைத்திய அதிகாரிகள் அவசரத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். முதலாவதாக மாணவர்கள் மூலம் திருகோணமலை நகரக்குடியிருப்பாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு இயக்கம் ஒன்றை நடத்தும் நடவடிக்கையை சுகாதாரத்திணைக்கள அதிகாரிகள் திருகோணமலை ரோட்டரிக்கழகத்தின் அனுசரணையுடன் மாகாண சுகாதாரத்திணைக்கள அதிகாரிகள், நகரப்பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுடன் நேற்று நண்பகல் அளவில் திருகோணமலை நகரமண்டபத்தில் நடத்தினார்கள் வீடுவீடாகச் சென்று குடியிருப்பாளர்கள் மத்தியில் பிரசாரம் செய்வது, டெங்கு காய்ச்சலைப் பரப்பும் நுளம்புவளருவதற்குஉகந்த இடங்களாகக் காணப்படும் சிரட்டைகள், அழிக்கப்பட்ட டயர்களை வீட்டு வளவிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்று மாணவத்தொண்டர்கள் குடியிருப்பாளர் மத்தியில் பிரசாரம் மேற்கொள்ளுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதே வேளை நகரசுகாதாரப் பணியாளர்கள் மூலம் நகரை சுத்தமாக வைக்கும் நடவடிக்கையை அதிகாரிகள் மேற்கொள்வார்கள். (25)

# திருமலை தமிழ்கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியல் 23. இல் வெளியிடப்படும்

(திருகோணமலை)

திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறும் வேட்பாளர்கள் பற்றிய விபரங்கள் அடுத்தவாரம் வெளியிடப்படும் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் பெப்ரவரி 19ஆம் திகதி அளவில் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அவ்வட்டாரங்கள்தெரிவித்தன.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, திருகோண மலைமாவட்டத்துக்கான வேட்பு மனுவை பெப்ரவரி 23 ஆம் திகதி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கவிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸின், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(சுரேஷ்அணி), தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் திருகோணமலை மாவட்டத்தலைவர்கள் நேற்று முன்தினம் வியாழன் இரவு கூடி, வேட்பாளர் பட்டியல் தயாரிப்பு தொடர்பான ஆலோசனையை நீண்ட நேரம் நடத்தினர் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் சார்பில் வேட்பு மனுவில் இடம் பெறவேண்டிய வேட்பாளர்கள் பற்றியும் அக்கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டன என்றும் தெரியவருகின்றது. இக்கூட்டத்திற்கு தமிழீழ தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமை வகித்தார். பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரட்னசிங்கமும் பங்கு பற்றினார். (25)

# மிகமோசமான நிலையில் நட்டாங்கண்டல்-குஞ்சுக்குளம் வீதி

(மல்லாவி)

நட்டாங்கண்டல் பிரதேசத்திலிருந்து பனங்காமம் மூன்று முறிப்பு குஞ்சுக்குளம் செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாக இருந்து வருவதால் இங்கு வாழும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மேற்படி பிரதேசங்களில் இருந்து நூற்றிற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. 8மைல் தூரத்தில் நட்டாங்கண்டல் பிரதேசத்திற்கு மருத்துவ சிகிச்சை பெறுவதற்கும் பாடசாலைகளுக்கும் விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும் இவ்வீதியால் பிரயாணத்தைத் தொடர்கின்றனர். (24)

## மாதாந்தப் பொதுக் கூட்டம்

முல்லை. மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16.02.2004. அன்று இணைய மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு நடைபெறும். 2004 ஆம் ஆண்டிற்கான திட்டமுன்மொழிவுகள் ஆலோசிக்கவிருப்பதால் நிறுவன இணைப்பாளர்களைத் தவறாது சமுகம் கொடுக்கும்படி தலைவர் வேண்டுகின்றார். (26)

## இல்ல மெய்வன்மை போட்டி

(கண்டாவளை)

கிளி/தம்பிராசபுரம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி கடந்த வியாழக்கிழமை பாடசாலை முதல்வர் திருமதி.சந்திராவதி பாலகிருஷ்ணன் தலைமையில் பி.ப.1.45 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இவ்விளையாட்டு நிகழ்வில் மங்கல விளக்கை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளி/வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் (முகாமைத்துவம்) க.வைரமுத்து ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மாவீரரின் தந்தை வி. பெருமாள் ஏற்றினார் தொடர்ந்து பாடசாலைக் கொடியை பாடசாலை முதல்வரும், இல்லக்கொடியை இல்ல ஆசிரியர்களும் ஏற்றிவைத்தனர். அடுத்து மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகள் மழையின் மத்தியிலும் சிறப்பாக நடைபெற்றது. கௌரவ விருந்தினராக கிராம சேவகர் கோ.சேகர் கலந்துகொண்டார். இறுதியாக வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்கு பரிசில்களை பிரதிக்கல்விப்பணிப்பாளர், க.வைரமுத்துவும் கிராம சேவகர் கோ.சேகரும் வழங்கிக்கௌரவித்தனர்.

இப்போட்டியில் பச்சை நிறத்தை உடைய சந்திரன் இல்லம் 1ஆம் இடத்தையும் மஞ்சள் நிறத்தை உடைய சூரியன் இல்லம் 2ஆம் இடத்தையும் பெற்றன. (14)

# காணி உரிமையாளர்களுக்கு நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலக காணிக்கிளையினரால் தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களுடைய காணி உரிமையாளர்களுக்கு நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் (எல்,டி,ஓ பொமிற்) வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் நேற்றைய தினம் கரைச்சிப் பிரதேச செயலக காணிஉத்தியோகஸ்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தலைமையில் உதயநகர் கிராமஅபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்துஉதயநகர் கிராம காணி உரிமையாளர்களுக்கு நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றது.

இதன்போது 52 காணி உரிமையாளர்களுக்கு நிரந்தர அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும், காணி மாற்றம் சம்பந்தமான 35 நடவடிக்கைகளும், பதிவுக்குட்பட்டிருந்த 18 காணிஉரிமையாளர்களுக்கு புதிய அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பெற்றன.

உதயநகர் மேற்கு கிராமசேவை அலுவலர் சிவஞானசுந்தரமூர்த்தி, உதயநகர் மேற்கு கிராமஅபிவிருத்திச்சங்க தலைவர் பாபு, செயலர் சிவனேசன் மற்றும் தர்மகுலசிங்கம் ஆகியோர் மேற்படி நடவடிக்கைகளுக்கு உறுதுணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ)


# இயலவிற்பனை

## (ஏல விற்பனை)

01. உந்துருளிகள்

*இயங்கும் நிலை

*உதிரிகளாக்கும் நிலை

02. பார்வையிடும் காலம்:- 14,15,16-02-2004

இயலம் விடப்படும் நாள்:-17 - 02 - 2004

இடம் :- பாண்டியன் ஊர்திவிற்பனை நிலையம், கரடிப்போக்குச்சந்தி, கிளிநொச்சி.

(3984)

# அணுத் தொழில்நுட்ப கறுப்புச் சந்தையை தடைசெய்ய உலகளாவிய ரீதியில் முயற்சி தேவை

## அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்



(வாஷிங்டன்)

**அணுத் தொழில்நுட்ப கறுப்புச்சந்தையைத் தடைசெய்வதற்கு உலகளாவிய ரீதியில் கருமையான முயற்சி தேவைப்படுவதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.**

அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், அணுப்பரம்பல் தடைச் சட்ட உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகளுக்கு மாத்திரம் அணுவாயுதத் தொழில்நுட்பத்தை மட்டுப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

பயங்கரவாதிகளும், பயங்கரவாத நாடுகளும் பாரிய அழிவு ஆயுதங்களைப் பெறுவதற்கான போட்டியில் ஈடுபட்டுள்ளன என்றும், அந்தப் போட்டியில் அவர்கள் தோற்கவேண்டும் என்றும் புஷ் கூறியுள்ளார்.

தமது சிவில் அணுத் திட்டங்களுக்குரிய கருவிகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான முன்னறிவித்தலற்ற ஐ.நா. அணுப்பரிசோதனைகளுக்கான அனுமதியை அணுப் பரம்பல் தடைச்சட்ட உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகளுக்கு மட்டுமே அடுத்த வருடம் முதல்வழங்க வேண்டும் என்றும்,

ஈரான் தன்னிடம் அணுவாயுத உற்பத்தி நோக்கங்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்து வருகின்றபோதும், ஈரானும், வடகொரியாவும் அணுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அணுவாயுதப் பரம்பல் தடைச் சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தியுள்ளன என்றும் கூறியுள்ளார். இது தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அணுசக்தி நிறுவனம் சிறப்புக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு வேலை வழங்க வேண்டாமென அமெ.அரசு அறிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறும் குடியேற்றவாசிகளுக்கு தற்காலிகமாக வேலைவாய்ப்புக்களை வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் 8-15 மில்லியன் வரையிலான மக்கள் இதுவரை சட்டவிரோதமாக வருகை தந்துள்ளதாகவும் அவர்களுக்கு மூன்று வருடத்திற்கான தற்காலிக விசா வழங்கும் நடவடிக்கைகள் கடந்த மாதம் 07ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெள்ளைமாளிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை எல்லாப்பகுதிகளில் வேறுநாட்டவர்களின் ஊடுருவல் இல்லாதவாறு தீவிரமாக கண்காணிக்குமாறு படையதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. நாட்டிற்குள் சட்டவிரோத குடியேற்றவாசிகள் குடியேறும்போது பலபிரச்சினைகள் ஏற்படலாமென புஷ் மேலும்அறிவித்துள்ளார்.

## ஈரான் மீதான நடவடிக்கை குறித்து அமெரிக்கா ஆராய்வு

(வாஷிங்டன்)

தொடர்ந்து அணுவாயுதங்களை வைத்திருக்கும் ஈரான் மீது நடவடிக்கையெடுப்பது பற்றி ஆராய்ந்து வருவதாக அமெரிக்கா [illegible]ரிவித்துள்ளது.

இதுவரை உலகி[illegible]கு அறிவிக்கப்படாத அணுவாயு[illegible] தொழில்நுட்பங்களை ஐ.நா. கண்காணிப்பாளர்கள் ஈரானில் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர். இதேவேளை அமெரிக்காவின் நிர்வாக உத்தியோகத்தர் ஜோன் ரோட்டன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆயுதக் கண்காணிப்பாளர்கள் யுரேனியம் மாதிரிகளை ஈரானில் கண்டுபிடித்துள்ளனர். இவற்றினூடாக ஆயுதங்களைத் தயாரிக்க உபயோகிக்கப்படும் மூலப்பொருட்களை பதனிட முடியும் என கூறியுள்ளார். ஆனால் இத்திட்டங்கள் இராணுவ நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச் சாட்டை ஈரான் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்.உடன் இராஜதந்திர அணுகுமுறையை கடைப்பிடிக்க வடகொரியா இணக்கம்

அவுஸ்திரேலியாவுடன் ராஜதந்திர ரீதியிலான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வடகொரியா இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆறுமாதங்களாக நடைபெற்று வருகின்ற அணுவாயுதம் தொடர்பான பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவரும் நோக்குடன் தென்கொரியா, அவுஸ்திரேலியா, வடகொரியா, யப்பான், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் பீஜிங்கில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இவ் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.




அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் இடையிலுள்ள நயாகரா நீர்வீழ்ச்சி.

## வியட்நாமிற்கு நிதி உதவி

வியட்நாமில் பறவைக் காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு நிதியுதவி வழங்க உலக வங்கி இணங்கியுள்ளது.

இதற்கமைய சுமார் 10 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கனடாவின் கலிபெக்ஸ் துறைமுக பாதுகாப்பிற்காக ரோந்து சுற்றும் கனடாவின் கரையோர காவற்படை.

# அமெ.உயர் இராணுவ அதிகாரியை இலக்கு வைத்து ஈராக்கில் தாக்குதல்

(பாக்தாத்)

ஈராக் பலூஜா நகரில் அமெரிக்க உயர் இராணுவ அதிகாரி ஒருவரின் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலிலிருந்து அவர் மயிரிழையில் உயிர்தப்பினார். ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவக் கட்டளை மையத்தின் தளபதியான ஜெனரல் ஜோன் அபிசைட் என்பவர் தங்கியிருந்த கட்டடத்தின் மீது தொடர் ரொக்கற் தாக்குதல் நடத்தப்பட்டது.

பலூஜாவிலுள்ள பிராந்திய தலைமையகத்திற்கு அவர் வந்திறங்கிய சற்று நேரத்தில் அவரது வாகனத் தொடரணி மீதும் ரொக்கற் தாக்குதல் நடத்தப்பட்டது. அருகிலிருந்த கட்டடங்களிலிருந்து மூன்று ரொக்கற்றுக்கள் ஏவப்பட்டன எனினும் அவர் எவ்வித பாதிப்புமின்றி தப்பிக் கொண்டதாக அமெரிக்கப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் ஈராக்கில் நடத்தப்பட்ட மூன்றாவது பாரிய தாக்குதல் இது வென்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் ஜூன் 30இற்கு முன்னர் தேர்தலை நடத்த முடியும் என்பது சந்தேகமே

## ஐ.நா.செயலாளர்நாயகம் கொபி அனான்

(பாக்தாத்)

ஈராக்கிய மக்கள் நேரடித் தேர்தல்களையே விரும்புகிறார்கள் எனவும் அத்தகைய தேர்தல் ஒன்றை ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் நடத்த முடியும் என்பது சந்தேகமாகவுள்ளதாக ஐ.நா.நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் அனான் இதனை வலியுறுத்தியுள்ளார். ஈராக்கிய சனத்தொகையில் 60 சதவீதமான தொகையை கொண்டுள்ள ஷியா முஸ்லிம்கள் நேரடித் தேர்தல் நடத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை ஐ.நா.வின் ஆதரவுடன் ஈராக்கில் தெரிவு செய்யப்படுகின்ற அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் ஈராக்கை புனரமைக்க தமது அமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தடுப்புச் சுவர் குறித்த சர்வதேச நீதிமன்றின் விசாரணைக்கு இஸ்ரேல் சமுகமளிக்காது

## இஸ்ரேல் அறிவிப்பு

மேட்டுக் கரையோரப் பகுதியில் இஸ்ரேல் அமைத்து வருகின்ற தடுப்புச் சுவர் விவகாரம் பற்றிய விசாரணைகள் சர்வதேச நீதிமன்றில் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை இவ் விசாரணைகளின் போது சமுகமளிக்க மாட்டோமென இஸ்ரேல் அறிவித்துள்ளது. அத்துடன் இஸ்ரேலிய அதிகாரிகள் கருத்துத் தெரிவிக் கையில்,

பலஸ்தீன தற்கொலைக் குண்டுதாரிகளைத் தடுப்பதற்காகவே இச்சுவர் கட்டப்படுவதாகவும் இதன் மூலம் 10 இற்கு மேற்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் அலுவலகம் கருத்துத் தெரிவிக்கையில், இது ஓர் அரசியல் ரீதியான நடவடிக்கையல்ல எனவும் இவ்விடயம் தொடர்பாக சர்வதேச நீதிமன்றம் தீர்மானம் எதனையும் மேற்கொள்ள இயலாதென தெரிவித்துள்ளது. இவ் விடயத்தை விளக்கி சர்வதேச நீதிமன்றத்திற்கு இஸ்ரேல் ஏற்கனவே அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

சர்வதேச நீதிமன்றம் எத்தகைய தீர்ப்பை வழங்கினாலும் இதனை அகற்றும் நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொள்ள உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# ஷியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவரை சந்திக்க ஐ.நா. குழு ஈராக் பயணம்

ஈராக்கின் ஷியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா அலி அல்சிஸ்ரானியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் குழுவொன்று ஈராக்கின் நயாவ் நகரில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்குச் சென்றுள்ளது. தேர்தல்கள் நடத்தப்படாமல் ஈராக்கில் அதிகார மாற்றத்திற்கு கடுமையாக எதிர்ப்பை ஆயதுல்லா தெரிவித்துவந்தமை தெரிந்ததே. இதனிடையே அபுமுஸாப் அல்சர்கவி ஈராக்கின் அமெரிக்க நிர்வாகிகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் உள்நாட்டுப் போரை பெரியளவில் ஆரம்பிப்பதன் மூலம் கூட்டுப்படைகளை துரத்தியடிக்க முடியும் எனக் கூறியுள்ளது.

# 10 வருடங்களில் 2003-QQ-47 கோள்

## பூமியுடன் மோதி பெரும் அழிவை உண்டுபண்ணுமா

ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து மிக வேகமாக வந்து கொண்டிருக்கும் கோள் ஒன்று இன்னும் பத்து வருடங்களில் பூமியை மோதும் என நியூமெக்சிக்கோ விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோள் 260 கோடி தொன் நிறையுடையதாக இருப்பதுடன் அது பூமியில் மோதினால் ஏற்படும் சேதம் 2ம் உலகப்போரில் ஹிரோசீமா நகரைத் தாக்கிய அணுகுண்டின் சேதத்தை விட இருகோடி மடங்கு அதிகமாகும்.

இத்தகவலை பிரிட்டனின் **Near earth object information** நிறுவனமும் உறுதிசெய்துள்ளது.

மிக வேகமாகப் பயணிக்கும் இக்கோள் முதலில் வளிமண்டலத்தில் மோதி அதனால் ஏற்படும் தீச்சூவாலையுடன் பூமியை அண்மிக்கும் போது வெப்பச் சூறாவளி ஏற்படும்.

புவிக்கு 500 மைல்கள் தொலைவில் வரும் போது ஏற்படும் தாக்கத்தினால் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு கடலலைகள் பலமடங்கு உயரத்தில் எழும். அத்துடன் இக்கோள் பூமியுடன் மோதும் போது அதனால் புவியில் இருந்து கிளம்பும் தூசி மண்டலம் பலகிலோ மீற்றர்கள் மேலெழுந்து சூரியனை மூடிவிடும் இதன் காரணமாக சூரிய ஒளி தடைப்படும்.

இக்கோள் பூமியினுள் ஒரு கி.மீற்றர் தூரம் வரை ஊடுருவலாம் இதனால் பூமியதிர்ச்சியும் ஏற்படும் மற்றும் தூசு மண்டலத்தினால் சூரிய ஒளி புவிக்கு கிடைக்க ஆயிரம் வருடங்கள் எடுக்கும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பேரழிவு தரும் கோள் 2003-QQ-47என பெயரிடப்பட்டுள்ளதுடன் மேலும் விபரங்களை அறிய விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர் தற்போது கிடைத்துள்ள தகவலின்படி இக்கோள் 450 கோடி வருடங்களுக்கு முன்பு தேன்றியதாக கருதப்படுகிறது.

சுமார் மூன்றே முக்கால் மைல் விட்டமுடைய இக்கோள் பூமியைப்போன்றே ஞாயிற்றுத் தொகு



தியில் சூரியனைச் சுற்றி வந்ததெனினும் தற்போது அது தனது புவியொழுக்குப்பாதையை விட்டு விலகியிருப்பதாகவும் புவியை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கோள் புவியின் மீது மோதும் வாய்ப்புக்கள் பற்றி ஆராய உலகெங்கிலுமுள்ள விண்வெளி ஆய்வு நிலையங்கள் ஆய்வுகளை நடத்தி வருகின்றன.

இது போன்று 2003 ஆம் ஆண்டிலும் ஒரு கோள் புவியில் இருந்து 75 ஆயிரம் மைல்களுக்கப்பால் தோன்றி மறைந்துள்ளது. மற்றும் 5Q-222 எனப்படும் கோள் ஒன்றும் கடந்த செப்ரம்பர் 27 ஆம் திகதி 88 ஆயிரம் மைல் தொலைவில் கடந்து சென்றுள்ளது. அது புவியை கடந்து சென்ற 11 மணித்தியாலங்களின் பின்பே விஞ்ஞானிகள் அறியமுடிந்தது.

இவ்வாறு ஆபத்து நிறைந்த கோள்களினால் புவிக்கு ஏற்படும் அழிவுகளைத் தடுக்கும் நோக்கில் விஞ்ஞானிகள் சக்தி வாய்ந்த ஏவுகணைகள் மூலம் அவற்றை திசை திருப்பிவிடுவது பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இக்கோள்களின் பிரயாண மார்க்கத்தைக் கண்டறிய அவர்களுக்கு 10 வருடகாலம் அவகாசம் தேவைப்படுகிறது.

இக்கோள்களின் பாதிப்பினாலேயே 65 லட்சம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த டைனோசர் அழியக் காரணமாக இருக்கும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

1994 ஆம் ஆண்டிலும் வியாழனின் மேற்பரப்பில் இவ்வாறான சம்பவம் நடைபெற்றது.

# தேனீக்கள் கொட்டுவதேன்

பூச்சியினங்களில் சிறப்பான அம்சத்தைக் கொண்டுள்ளவை தேனீக்களே. பூக்களிலிருந்து தேனைப் பெற்று சேமிக்கும் விசித்திர வண்டினம் தேனீயே.

எனினும் அது மனிதனைத் தாக்கும் போது சில வேளைகளில் இறப்பும் நிகழ்வதுண்டு. அவ்வாறு தேனீக்கள் (கொட்டுவது) தாக்குவது கோபம் ஏற்படும் போது, மனித உடலில் ஏற்படும் நறுமணம், துர்நாற்றம் காரணமாகவும் என விஞ்ஞானிகள் ஆதிகாலம் தொட்டு தெரிவித்து வருகின்றனர்.

தேனீ ஒன்று கொட்ட முயலும் போது மிக அவதானமாக இருப்பதால் கழுத்து, முகம் ஆகிய பகுதிகள் தாக்கப்படாது பாதுகாத்துக் கொள்ளமுடியும். தற்செயலாக ஒருவர் தாக்கப்பட்டால் தாக்கப்பட்ட பகுதியில் தேனீ தனது கொடுக்கை கழற்றி விடும். உடனடியாக தேனீக்களின் கொடுக்குகளை பிடுங்கி விட வேண்டும். இதனால் நச்சுப் பொருள் உடலில் செல்வதை குறைக்கலாம். அத்துடன் வீக்கம் கட்டுப்படுத்தப்படும். கொட்டிய இடத்தில் சமையல் சோடாத் தூள் அல்லது கெலமைன் என்பவற்றைப் பூசலாம்.

# குளோனிங் முறையில் மனித கரு

## தென்கொரிய விஞ்ஞானிகள் சாதனை

மனிதக் கரு ஒன்றை முதல் முறையாக குளோனிங் முறையில் தென்கொரிய விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

செயற்கை முறையில் மனித கருவை உருவாக்கும் முயற்சியில் வெற்றிபெற்றதாக பல மருத்துவர்கள் இதுவரை கூறியிருக்கின்றார்கள். ஆனால், அவர்களால் அதை நிருபிக்க முடியாமல் போயிருக்கிறது. ஆனால் இம்முறை இந்த தென்கொரிய விஞ்ஞானிகள் கூறியதை மற்றைய விஞ்ஞானிகள் பரிசோதனை செய்து உறுதிப்படுத்தியுள்ளனர்.

குளோனிங் முறையில் செயற்கை மனிதனை உருவாக்கும் முயற்சிக்கு உலகில் பல நாடுகள் தடை விதித்துள்ளன. ஐ.நா. சபையும் இதற்காக எடுத்துவரும் முயற்சி இதுவரை வெற்றி காணவில்லை.

முக்கியமாக நோய்களைக் குணப்படுத்தவே இந்தக் குளோனிங் முறை பயன்படுத்தப்படும்.

எலிகள், மாடுகளின் கருக்களைப் பிரதி செய்யும் போது கண்ட வெற்றிகளை விட குரங்குகள் மனிதர்கள் போன்றவற்றை பிரதி செய்யும் போது அரிதாகவே வெற்றி கிடைக்கிறது. என்றும் தென்கொரிய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்

# சிம்பாப்வே

ஆபிரிக்காவின் தென்பகுதியில் அமைந்துள்ளது(முற்காலத்தில் ரொடீசியா என்று அழைக்கப்பட்டது.)

* தலைநகர்:-கராரே
* பரப்பு:- 391000 2 கி.மீ.
* மொழி:-ஆங்கிலம்,ஷோனா, டெபேலா.
* நாணயம்:- டொலர் (ZWD)
* சமயம்:- கிறீஸ்தவம்
* சராசரி ஆயுள்:-44.1வருடங்கள்
* முக்கியமான உற்பத்திகள்:- கோப்பி, பருத்தி, புகையிலை, இரசாயனப்பொருட்கள், துணிகள், அஸ்பெஸ்டஸ், நிலக்கரி,செம்பு

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு 19 வீதம்,(2000 ஆம் ஆண்டில்) தொழில் துறை 25 வீதம், சேவைத்துறை 56 வீதம் சராசரி பணவீக்கவீதம் 29 வீதம்

# இலங்கையில் தென்னிந்திய தொடர்புகளை வலுப்படுத்திய படையெடுப்பு சந்தர்ப்பங்கள்

1. சேனன், குந்திகன் படையெடுப்பு:-
" இந்திய முற்றுகை.சேனன், குந்திகன் ஆகிய குதிரை வியாபாரிகள் சூரதிஸ்ஸ மன்னனைக் கொன்று அநுராதபுர இராசதானியை கைப்பற்றியமை.

2. எல்லாளன் படையெடுப்பு:-
எல்லாளன் கி.மு.145 இல் அசேல மன்னனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றி தொடர்ந்து 44 வருடங்கள் ஆட்சி செய்தமை.

3. ஏழு தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்களின் படையெடுப்பு:-
வலகம்பா மன்னன் காலத்தில் வருகை தந்த ஏழுபேர் (பாண்டியர்கள்) ஆட்சியைக் கைப்பற்றியமை.

4. பண்டுவின் படையெடுப்பு:-
மித்தசேன மன்னன் காலத்தில் பண்டு,பாரிந்த உட்பட்ட பாண்டிய வம்சத்தினர் அநுராதபுரத்தைக் கைப்பற்றி 27 வருடங்கள் ஆட்சி செய்தமை.

5. ஸ்ரீமாரவல்லபன் படையெடுப்பு:-
முதலாம் சேனன் காலத்தில் ஸ்ரீமாரவல்லபன் (பாண்டிய) படையெடுத்து இராசதானியைக் கைப்பற்றியமை.

6. முதலாம் இராஜராஜ சோழனின் படையெடுப்பு:-
கி.பி. 993 5ஆம் மிகிந்தன் காலத்தில் இராஜராஜசோழன் படையெடுத்து அநுராதபுரத்தைக் கைப்பற்றி பொலனறுவையை தலைநகரமாக்கி ஆட்சிபுரிந்தான்.

7. முதலாம் இராஜேந்திர சோழனின் படையெடுப்பு
(கி.பி. 1017 இல்) இராஜராஜ சோழனை தொடர்ந்து ஆட்சிபீடமேறிய 1ஆம் இராஜேந்திரசோழன் இலங்கை முழுவதையும் தனது ஆட்சிக்குட்படுத்தினான்.

# இலங்கை தென்னிந்தியாவுடன் உறவை வலுப்படுத்திய விவாகத் தொடர்புகள்

1. **விஜயன்:-** மதுராபுரியிலிருந்து இளவரசியை வரவழைத்தமை.

2. **பண்டுவாசு தேவன்:-**
'சாக்கிய வம்ச' பத்தகச்சானாவை வரவழைத்து திருமணம் புரிந்தான்.

3. **நான்காம் மகிந்தன்:-**
கலிங்க நாட்டு அரசியைத் திருமணம் செய்தான்

4 **முதலாம்விஜயபாகு:-**
கலிங்க நாட்டு இளவரசியை திருமணம் செய்தான்.

5. **மித்தா இளவரசி:-** 1ஆம் விஜயபாகு தனது சகோதரியான மித்தா இளவரசியை பாண்டிய மன்னனுக்கு மணமுடித்து வைத்தமை.

# இலங்கை தென்னிந்திய அரசியல் தொடர்பில் படையுதவிகள் பரிமாறப்பட்ட சந்தர்ப்பங்கள்

1 **ஈழநாதன்:-**
தென்னிந்திய படையுதவியை நாடி ஆட்சி செய்தான்.

2 **அபயநாகன்:-**
கி.பி 3ஆம் நூற்றாண்டில் அபயநாகன் தென்னிந்திய ஆட்சியாளர்களின் உதவியை நாடி 9 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

3. **முதலாம் முகலன்:-**
தென்னிந்தியாவில் உதவியைப் பெற்று காசியப்ப மன்னனுடன் போர் புரிந்து ஆட்சியைக் கைப்பற்றி 18 வருடங்கள் ஆட்சிபுரிந்தமை.

4. **ஸ்ரீநாகன்:-**
தமிழ் ஆட்சியாளர்களின் உதவியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றினான்.

5. **மூன்றாம் அக்போ:-**
கெட்ட திஸமன்னனைத் தோற்கடிக்க தென்னிந்தியரின் படையுதவியை நாடினான்.

6 **மானவர்மன்:-**
கி.பி.684 பல்லவர்களின் உதவியைப்பெற்று ஆட்சியைக் கைப்பற்றினான்.

# போர்க் கைதிகளை சிறைப்பிடித்த சந்தர்ப்பங்கள்

1. **சோழ மன்னன்:-**
வங்க நாசிது திஸ்ஸ மன்னன் காலத்தில் சோழ மன்னன் இலங்கையை முற்றுகையிட்டு 12 ஆயிரம் பேரை சிறைப்படுத்தியுள்ளான்.

2. **கஜபாகு மன்னன்:-**
கி.பி.112 இல் கஜபாகு மன்னன் சோழ நாடு சென்று யுத்தம் புரிந்து 12 ஆயிரம் பேரை மீட்டெடுத்ததோடு அங்கிருந்து 12 ஆயிரம் பேரை சிறைப்பிடித்ததாகக் கூறப்படுகின்றது.

# தெரிந்துகொள்ள

1.ஷிஸெல்ஸ் தீவுகளில் மிகப் பெரிய கடல் ஆமைகள் கடலோரங்களில் காணப்படுகின்றன. அத்தீவில் வாழும் சிறுவர்களின் பொழுது போக்கு ஆமைகளின் மேலேறி தினசரி சவாரி செய்கின்றனர்.

2. அவுஸ்திரேலியாவில் 'ஐயர்ஸ் றொக்' என்ற பெயரில் ஒரு ஒணான் வடிவப்பாறை இருக்கின்றது. பகல் வேளைகளில் அது படிப்படியாக தன் நிறங்களை **Pink,Grey, lilac, Orange** மற்றும் இருண்ட சிவப்பு நிறங்களில் மாற்றிக் கொள்கிறது. இரவில் நிலவு வெளிச்சத்தில் பொன்னிறமாக மாறிவிடும் தன்மையைக் கொண்டிருக்கிறது. அப்பாறையில் படிகக்கற்பாளங்கள் அதிகமாக இருப்பதே இம்மாற்றங் களுக்கு காரணம்.

* நாயும் மனிதனைப்போல் கனவு காணும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

* உலகில் காகம் இல்லாத நாடு நியூசிலாந்து மட்டும் தான்.

* பிளாஸ்டிக் சர்ஜரியின் தந்தையாக கருதப்படுவர் சுஷ்குதர் என்பவர் ஆவர்.

* உலகில் கடலில் தோன்றி ஏரியில் கலக்கும் ஒருநதி தஜீரா என்பதாகும்.

* எரிமலைப் பாறைகளின் மீது அமைந்திருக்கும் நாடு ஐஸ்லாந்து.

* உலகில் அதிகமாக வெள்ளி கிடைக்கும் நாடு வட அமெரிக்கா

* விலங்குகளின் இரத்தப் பிரிவுகள் **K.L.M.N.** என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது.

* "ஆசியாவின் வைரம்" என்று அழைக்கப்படும் நாடு இலங்கை ஆகும்.

* விலங்கினத்தில் சிம்பன்ஸி குரங்குகளுக்கு மட்டுமே ஜலதோஷம் ஏற்படும்.

* தேனீ மற்றும் கழுகு ஆகியவை சூரியனை நேருக்கு நேர் பார்க்கும் பார்வைத்திறன் படைத்தவை.

* நண்டுக்கு பற்கள் [illegible] வயிற்றில்தான் அமைந்துள்ளது. அத்துடன் நண்டு தனது ஆயுளில் 20 தடவை செட்டை உரித்துக் கொள்கின்றது.

* ஆமையின் வேகம் சுமாராக மணிக்கு 286 அடி ஆகும்.

# திட்டமிட்டபடி வாஷிங்டன் மாநாடு நடைபெறும் சிறிலங்காவின் தேர்தல் குறித்தும் ஆராயப்படும்

## அமெ. பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ்

(வாஷிங்டன்)

**பாராளுமன்றம் கலைக்கப்பட்டு சுமுகமற்ற அரசியல் சூழ்நிலை இலங்கையில் நிலவிவரினும்கூட வாஷிங்டனில் பெப்ரவரி 17ஆம் திகதி இடம்பெறவிருக்கும் இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும். மாநாட்டை ஒத்தி வைப்பதற்கோ, பிற்போடுவதற்கோ எந்தவொரு அவசியமும் ஏற்படவில்லை. இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் நேர்மையாக நடத்தப்படுவது குறித்தும் ஆராயப்படும் என்று அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் கூறியுள்ளார்.**

மேற்படி உதவி வழங்கும் மாநாட்டுக்கு றிச்சர்ட் ஆர்மிரேஜ் தலைமை தாங்குவார் என்றும் யசூசி அகாஷி, நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஜோன் ஜீன், அமெரிக்காவுக்கான ஜரிஸ் குடியரசின் தூதுவர் நோல் பஹேரய் ஆகியோர் கலந்து கொள்வதுடன், இம்மாநாடு இராஜாங்க அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் அமெரிக்க நேரப்படி காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாநாட்டில் ஏப்ரல் மாதம் இலங்கையில் நடைபெறும் தேர்தல் அமைதியான முறையில், வன்முறைகள் எவையுமற்று நீதியாக நடைபெற வேண்டும் என்பது குறித்து ஆராயப்படுவதுடன் இலங்கைக்கான நிதியுதவிகளை வழங்குவது குறித்தும் திட்டவட்டமான தீர்மானம் எடுக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. நீதியான சுதந்திரமான தேர்தலையே அமெரிக்கா விரும்புகின்றது. அதேநேரம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்பும் வகையிலான தேர்தல் பிரச்சாரங்களையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைபற்றிய அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து கருத்துக் கூறும்போதே அமெரிக்கத் தூதுவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## 22 பேர் கைது

சட்டவிரோதமாக கஞ்சா உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 22 பேரை மொனராகல விசேட பொலிசார் கைது செய்துள்ளார்கள். திங்கட்கிழமை 250 பொலிசார் தனமல்வில, வெல்லவாய, புத்தல பகுதிகளில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையிலேயே பல இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாப் பயிர்கள் தீவைக்கப்பட்டு நாசமாக்கப் பட்டுள்ளது. 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஐ.தே.மு. 15 அமைச்சர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 15 அமைச்சுக்களுக்கு எதிராக ஊழல் மற்றும் முறைகேடுகள் பற்றி லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மூன்று கூட்டுத்தாபன தலைவர்கள், அரசியல் கட்சியொன்றின் பிரமுகர்களுக்கு எதிராகவும் ஆணைக்குழுவிற்கு நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐ.தே.மு. அரசாங்கத்தின் லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிக் கண்டறியும் முகமாக சனாதிபதி நியமித்த குழு உட்பட முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர்கள் கொண்ட குழு இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளது.

இதற்கமைய குற்றச்சாட்டுக்கள் அடங்கிய 17 ஆவணங்கள் நேற்று முன்தினம் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.

அமைச்சர்கள் ஜெயலத் ஜெயவர்த்தன, ஜோன் அமரதுங்க, மகிந்த சமரசிங்க,ரவி கருணாநாயக்க, லக்ஸ்மன் கிரியெல்ல, ராஜித சேனாரத்ன, ரி. ஏன். சொக்ஸி, மகிந்த விஜய சேகர, ஏ.ஆர். எ.காதர், எம். எச். முகமத், திலக் மாரப்பன, எஸ்.பி. திஸாநாயக்க, பந்துல குணவர்த்தன, ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த, ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரம மற்றும் ஆர். பாஸ்கரலிங்கம், லால் நாணயக்கார, விக்கிரம வீரசூரிய, சுமுமுனசிங்க ஆகிய அரச நிறுவனங்களின் முன்னாள் முக்கியஸ்தர்கள் பலருக்கும் எதிராகவும் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## உலக வங்கியின் 184 மில். டொலர் உதவி தேர்தல் முடியும் வரை தாமதமடைந்துள்ளது

### அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தகவல்

(கொழும்பு)

அவசர தேர்தலொன்றை நடத்த சனாதிபதி எடுத்துள்ள முடிவு நாட்டின் ஸ்திரத் தன்மையை சிதறடித்துள்ளதுடன் சமாதான நடவடிக்கைகளையும் வெளிநாட்டு உதவிகளையும் பெரிதும் தாமதப்படுத்தியுள்ளது என அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலகவங்கி வழங்கியிருந்த 184 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி தேர்தல் முடியும் வரை தாமதமடைந்துள்ளது.

தொடர்ந்தும் பதவியிலிருக்கும் ஆசையினால் சனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து நடத்தப்பட்ட முதலாவது அமைச்சரவை கூட்டத்தையடுத்து நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைக் கூறினார்.

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய யூனியன், பொதுநலவாய நாடுகள் மற்றும் ஜப்பானிய அரசாங்கத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (32)

## கிழக்குப் பல்கலையில் மருத்துவ பீடம் சிறிலங்கா அரசாங்கம் அனுமதி

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கு திறைசேரி அனுமதி அளித்துள்ளது.

அண்மையில் பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் திறைசேரி அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்திலேயே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறுவதற்கான பத்திரங்களும் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த வருடம் மாணவர்களை அனுமதிக்கக் கூடிய நிலை ஏற்படும் என கிழக்குப் பல்கலைக்கழக அதிகாரி கூறியுள்ளார்.

## க.பொ.த.உயர்தரப்பரீட்சை மே ஆறாம் திகதி ஆரம்பிக்கும்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப பரீட்சை மே மாதம் 06 ஆம் திகதி ஆரம்பமாகி 31ஆம் திகதி முடிவடையவுள்ளதாக கல்வியமைச்சர் அறிவித்துள்ளார். ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி இப்பரீட்சைகள் ஆரம்பிக்கப்படுமென முன்னர் கூறப்பட்டிருந்தமை தெரிந்ததே. பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளமையால் பரீட்சை பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறிலங்காவில் குற்றச்செயல்களைத் தடுக்க சனாதிபதி தலைமையில் தேசிய மதியுரை சபை

(கொழும்பு)

அதிகரித்து வரும் குற்றச்செயல்களைத் தடுக்க தேசிய மதியுரைச் சபையொன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இச்சபையினர் புதன்கிழமை நியமிக்கப்பட்டனர். குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான கொள்கைகளை வகுக்கும்போதும், அவற்றை நடைமுறைப்படுத்தும் போதும் அரசுக்கும், பொலிசுக்கும் மதியுரைகளை வழங்குவது இந்த சபையின் பொறுப்பாகும் என சனாதிபதி செயலக அறிக்கை கூறியுள்ளது.

சமயத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், அரச சார்பற்ற இயக்கங்களின் தலைவர்கள், கல்விமான்கள், வர்த்தகர்கள் ஆகியோர் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய வகையில் 13 உறுப்பினர்களைக் கொண்டு இந்தத் தேசிய மதியுரைச் சபை நியமிக்கப்பட்டுள்ளது.

குற்றச்செயல்களின் அதிகரிப்பு, நீண்ட காலமாக ஏற்பட்டு வருகின்ற முறையினையும் அவை திட்டமிட்ட வகையில் குரூரமாக அதிகரித்து வருவதையும் முன்னிட்டு அதனைத் தடுக்கவே இச்சபை நியமிக்கப்பட்டதாகவும் சனாதிபதி செயலக அறிக்கை கூறியுள்ளது.

இந்நாட்டு மக்களின் மக்களுக்கிடையிலான தொடர்புகளையும், கூட்டுறவையும் அடிப்படையாகக் கொண்ட கலாச்சாரத்தின்படி இத்தகைய பிரஜைகள் குழுக்கள் குற்றத் தடுப்பில் பெரிதும் ஒத்துழைப்பு நல்கும் என சனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் கத்தியுடன் நின்றவருக்கு 3மாத சிறை

(வல்வை)

இயல்பு நிலைக்கும், அமைதிக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டதாகக் குற்றம் சாட்டி ஒருவருக்கு மூன்றுமாத கால சிறைத்தண்டனையை பருத்தித்துறை நீதிமன்று விதித்துள்ளது.

புலோலிப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் மதுபோதையில் பருத்தித்துறை பொலிஸ்நிலையம் முன்பதாக கத்தியொன்றுடன் அரைநிர்வாணமாக நின்றுள்ளார். அத்துடன் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் அவர் செயற்பட்டுள்ளார்.

இயல்புநிலை மற்றும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டதை சந்தேக நபர் ஒப்புக் கொண்டதையடுத்து மூன்று மாத சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்த நீதவான் கத்தியினை எடுத்துச் சென்றமை தொடர்பில் ஐம்பது ரூபா குற்றப்பணத்தைச் செலுத்தவும் உத்தரவிட்டுள்ளார். (27)

## தேசிய ஐக்கிய சுதந்திர முன்னணிக்கெதிராக செயற்படப்போவதாக இடதுசாரி முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

யுத்த நோக்கத்தைக் கொண்ட தேசிய ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு எதிராக தமது முன்னணி முழு வேகத்துடன் தேர்தல் பணிகளில் ஈடுபடப்போவதாக புதிய இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்; கூட்டமைப்பு அமைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

ஏற்கனவே, செயற்குழுகூடி ஆராய்ந்த வேளை, புதிய இடதுசாரி முன்னணியும், சனநாயக இடதுசாரி முன்னணியும் தமக்கிடையே கூட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கு இணக்கம் கண்டுள்ளதாக தெரிவித்தார்.

லங்கா சமசமாஜக்கட்சி மற்றும் கம்யூனிஸ் கட்சிகளை இக்கூட்டமைப்பில் இணைந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, கம்யூனிஸ் கட்சி நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தாம் தேசிய ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் சேர்ந்து போட்டியிடப் போவதாகத் தெரிவித்துள்ளது.

அத்துடன் தமது செயற்குழு கூடி ஆராய்ந்தவேளை, தேசிய ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு போட்டியிட 11 பேர் விருப்பம் தெரிவித்தனர். இதேவேளை, புதிய இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ள கூட்டிற்கு 05 பேர் மட்டுமே விருப்பம் தெரிவித்தனர். இதனால், 11 பேரை பெரும்பான்மையாகக் கொண்ட குழுவிற்கு முன்னுரிமை வழங்கி தாம் சனாதிபதியின் தலைமையில் கீழ் செயற்படுகிற தேசிய ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு, போட்டியிடப் போவதாக கம்யூனிஸ் கட்சியின் முன்னாள் செயலாளர் தெரிவித்துள்ளார். (32)

## நெற்செய்கையாளர்கள் மழையினால் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப்பெருநிலப்பரப்பில் பெய்து வரும் மழை காரணமாக நெற்செய்கையாளர்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

மேற்படி மழை காரணமாக அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ள வயல் நிலங்களில் நெற்கதிர்கள் சாய்வு நிலை அடைந்து வருவதன் காரணமாக தற்போது அறுவடை செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளதெனவும் கவலை தெரிவித்துள்ள நெற்செய்கையாளர்கள்,

காலபோக நெற்செய்கைவிதைப்பின் போது பெருமழை காரணமாக வயல் நிலங்களில் விதை நெல் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதன் விளைவாக விவசாயிகள் பெரும்சிரமங்களுக்கு உள்ளாகி மீளவும் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டமையும் தெரிந்ததே. (சோ)

# ரயில்வே ஊழியரின் தொழிற்சங்க நடவடிக்கையால் அரசிற்கு அறுநூறு கோடி ரூபா இழப்பு

(கொழும்பு)

ரயில்வே தொழிற்சங்கங்களின் சமீபத்திய தொழிற்சங்க நடவடிக்கைகளால் அரசுக்கு 600 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது எனப் போக்குவரத்து அமைச்சின்- திட்டமிடல் பிரிவுப் பிரதித் தலைவர் கலாநிதி டி.எஸ்.ஜயவீர கூறியுள்ளார்.

இச் சீர்கேடான நிலை இலங்கையின் அபிவிருத்தியில் தொடர்ந்தும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்நிலையில்தொழிற்சங்க நடவடிக்கைகள் போக்குவரத்துத் துறையை மென்மேலும் சீர்குலைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச போக்குவரத்து பஸ்களின் எண்ணிக்கை ஆறாயிரமாக இருந்தது. இன்று நான்காயிரமாகக் குறைந்து விட்டது. பின்தங்கிய பிரதேசங்களில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப் போதிய பஸ்கள் இல்லை. இந்நிலையில் பிரச்சினைக்குத் தீர்வு தனியார் மயப்படுத்தலே என்றால் அது தீர்வாகாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# சோம தேரரின் மரணத்தின் பின்பே தேவாலயங்கள் மீதான தாக்குதல் அதிகரித்தன

## -பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிறிஸ்தவர்களின் மதமாற்ற நடவடிக்கைகளுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் பிரச்சாரம் செய்து வந்த பௌத்த துறவிகள், சோமதேரரின் மறைவுக்குப் பின்னர் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்களை அதிகரித்துள்ளனர் என பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா கூறியுள்ளார்.

சோமதேரர் மாரடைப்பால் காலமானதாக மருத்துவக் குறிப்புக்கள் கூறுகின்றன. ஆனால், அவரது மரணத்துக்குக் கிறிஸ்தவர்கள் தான் காரணம் என்று பௌத்தர்கள் சிலர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இலங்கையில் கடந்த டிசம்பர் முதல் இன்றுவரை 130க்கும் அதிகமான கிறிஸ்தவ தேவாலயங்களும், கிறிஸ்தவ அமைப்புக்கள் மீதான தாக்குதல்களும் நடத்தப்பட்டிருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

# வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் வன்முறைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். கடந்த பொதுத் தேர்தலின் போது ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தது தெரிந்ததே.


## கிளி/மாவட்ட தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

## கணினிப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தின் பிராந்திய நிலையங்களான பூநகரி, பளை ஆகிய நிலையங்களில் கணினிப் பயிற்சி நெறி ஆரம்பமாக உள்ளதால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*கல்வித்தகைமை:- க.பொ.த .சாதாரண தரப்பரீட்சையில் ஆங்கிலம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தி.
அத்துடன் க.பொ. த.உயர்தரம் சித்தி.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 29.02.2004ற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது அந்தந்த பிரதேச செயலகங்களினூடாகவோ விண்ணப்பிக்கவும்.

*அதிபர்,*
*கிளி/தொழில் நுட்பக் கல்விநிறுவனம்,*
*கிளிநொச்சி.*

(சி-8782)



## அகவை 24இல் மலரும் நினைவுகளும் நெஞ்சகலா 8 ஆம் மாத நினைவலைகளும்...

| அன்னையின் மடியில் | | கடலன்னையின் பிடியில் |
|---|---|---|
| 14 | | 14 |
| □ | | □ |
| 02 | | 06 |
| □ | | □ |
| 1980 | | 2003 |



## கடற்புலி மேஜர் நிர்மலன்

### ரணராஜா ரகுநாத்

(நெடியகாடு,வல்வெட்டித்துறை,யாழ்)

தாலாட்டும் இளங் காற்றில் -இவ்
உலகம் போற்றும் இந்நாளில் -எம்
தாய்மடி வந்துதித்த மாதவனே!

பெருகி வரும் கண்ணீரில்
கரைகின்றது எம்காலம்
காலங்கள் கரைந்திடினும் -எம்
கண்ணீர்த் துளியின் ஈரம் என்றும் வாழும்!

வேண்டும் மறுபடி உங்கள் ஜனனம்-அதில்
மீண்டும் வாழ்ந்திடும் எம் ஜீவிதம்!
உதிர்ந்த மலராய், அன்றி-உங்களை
மலர்ந்த பூவாய் என்றும் எண்ணி....

உங்கள்
நினைவுடன் வாழும்
அன்பு அம்மா,அக்கா,
அத்தான்,தங்கை,
மருமகள்.

இல.40,றெட்பானா சந்தி,
விசுவமடு.

(4238)



# லெப்.கேணல் பொன்னம்மான் அவர்களின் 17 ஆம் ஆண்டு நினைவுகளில்



கெரில்லா யுத்தத்தில்
கொடி கட்டிப் பறந்த போதும்
மரபு வழிச் சமரில்
மாண்புடன் விளங்கிய போதும் -மாவீரன்
பொன்னம்மான் அவர்கள்
மகத்தாகச் செயற்பட்டார் -எம்
மங்காத்தலைவரின் வழி-வந்த
வீர மறவன் எங்கள்
பொன்னம்மான் அண்ணா
பார் போற்றும் வேங்கைத் தலைவரின்
காலமதில் மகளிர் அணிக்கு-முதல்
அடித்தளமிட்ட -எம்
பயிற்சி ஆசான் -அவன்
வெடிமருந்துத் துறையில்
விருப்புடன் செயற்பட்ட
விடுதலை வேங்கை-நாளும்
விடுதலையை நேசித்த வீரமறவன்
14.02.1987 அன்று
தமிழ் மண்ணுக்காய் விதையாக வீழ்ந்தவன்
வசந்தத்தை வரவேற்று -விரைந்த
காவிய விருட்சம்
காற்றோடு கலந்து விட்ட
கரிகாலன் வேங்கை இவன்
இவனோடு விழி மூடிக்கொண்ட
ஒ வேங்கைகளும்
விடுதலையை வீச்சாக்கி
வீரத்துடன் உழன்ற ஞாபகம்
உங்கள்........
17ஆம் ஆண்டு நினைவுகளைத்தாங்கி
தொடரும் உறுதியான விடுதலைப் பயணத்தை
விரைவாக்குவோம்.

லெப்.கேணல் பொன்னம்மான்
கண்ணிவெடிப் பிரிவு.

(3982)



### சிந்தனைக்கு

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும், அவர்களின் உடைமை நாசத்திற்கும், சிங்கள ஆளும் வர்க்கத்தின் வெறிபிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 14 -02-2004


## ஒன்றின் பின் ஒன்றாக...

''சனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட அமைச்சுப் பொறுப்புக்கள் பறிப்பினால் போர்நிறுத்த உடன்படிக்கை விதிகள் முடக்கப்படுகின்றன.'' என்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இக்கூற்றுக்கள் அரசியல் விரோதத்தின் பாற்பட்டதோ அன்றிச் சமாதானத்தின் மீதான ஆவலின் பாற்பட்டதோ எதுவாக இருப்பினும் சரி, இக்குற்றச்சாட்டுக்கள் நிதர்சனமானவையே ஆகும். அதாவது, சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாகப் போர்நிறுத்த விதிகளை முடக்குபவையாகவே உள்ளன.

"ஏற்கனவே, மூன்று அமைச்சுக்கள் பறிப்பினால், போர் நிறுத்த உடன்பாட்டின் முதலாம், மூன்றாம் பிரிவுகள் முடக்கமடைந்தன. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பறிப்பின் எதிரொலியாக இரண்டாம் பிரிவு முடக்கம் அடைந்துள்ளது." என்ற பிரதமரின் குற்றச்சாட்டு ஆதாரபூர்வமானது. ஆகையினால், இவற்றை நிராகரிப்பது என்பது இயலாத காரியமாகும்.

சனாதிபதி சந்திரிகா ஆரம்பம் முதலே, போர்நிறுத்த உடன்பாட்டிற்கு விரோதமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியே வந்துள்ளார். போர்நிறுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகள் பலமடைந்து வருவதாகத் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்த அவர், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கலைத்தமைக்குக் கூறப்படும் காரணங்களில் ஒன்று தேசிய பாதுகாப்பில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தவறிழைத்துவிட்டது என்பதே.

அவ்வாறு நிகழ்ந்தமைக்கு யுத்தநிறுத்தமே காரணம் என்ற ரீதியில் கருத்துக்களை முதன்மைப்படுத்தி வந்த சனாதிபதி சந்திரிகா அமைச்சரவைப் பறிப்பு, பாராளுமன்றக் கலைப்பு என்பனவற்றின் பின்னர் போர் நிறுத்தத்திற்கு மாறாகக் கடுமையாக விமர்சிப்பதை நிறுத்திக் கொண்டார். தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் போர் நிறுத்தம் தொடரும் என்ற ரீதியிலேயே வாக்குறுதிகள் அளிப்பதில் தற்பொழுது அவர் ஈடுபட்டுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா போர்நிறுத்தம் தொடரும் - பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் எனக் கூறி வந்தாலும், அதற்கான தேவைகூட அவருக்கு இருந்தாலும் அவரினால் அதனைக் கடைப்பிடிக்க முடியுமா? என்பது கேள்விக்குரிய தொன்றே. ஒருவகையில் பார்த்தால் அது சாத்தியப்பாடற்ற தொன்று என்றே கூறலாம்.

ஏனெனில், சனாதிபதி சந்திரிகா யுத்தநிறுத்தம் கடைப் பிடிக்கப்படும் என உறுதி கூறியபோதும் ஒருபுறத்தில் அவரின் நடவடிக்கைகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் சரத்துக் களை முடக்குபவையாகவுள்ளன. இந்நிலையில் யுத்த நிறுத்த உடன்பாடு என்பது படிப்படியாகப் பலவீனப்பட்டுக் கொண்டு செல்வதாகவே உள்ளது. இன்று யுத்தநிறுத்தம் பெரும் மீறல் கள் இன்றி கடைப்பிடிக்கப்படினும்கூட சனாதிபதியின் நடவடிக்கைகள் யுத்தநிறுத்தத்திற்கான அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்வதாகவே உள்ளது.

இது ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா தேர்தல் கூட்டாளியாகக் கொண்டுள்ள ஜே.வி.பி. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிக்கு ஆதரவானதொரு நிலைப்பாட்டைக் கொண்டதாகத் தெரியவில்லை. ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டில் அதிகாரப்பரவலாக்கல்கள் என்பதற்கான பேச்சிற்கே இடம் இருப்பதாக இல்லை. இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா யுத்தநிறுத்தம் அரசியற் தீர்வு என்பன பற்றி எவ்வளவுதான் பேசினாலும் அதில் நம்பிக்கை கொள்வதற்கு வாய்ப்பில்லை.

அதிலும், தற்போதைய பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிடத் தீர்மானித்திருக்கும் சு. கட்சிக்கும்-ஜே.வி.பி.க்கும் இடையிலான தொகுதிப் பங்கீடு குறித்து வெளியாகும் தகவல்களின்படி சுதந்திரக்கட்சி என்பது ஜே.வி.பி. இல்லாது எந்த நிலையிலும் ஆச்சரியம் தரும் வகையில் ஐ.தே. கட்சியுடன் கூட்டு ஏற்பட்டால் அல்லாது ஆட்சி அமைக்க முடியாது. இந்நிலையில், சனாதிபதி சந்திரிகா யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் என்பதோ, அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தை தொடரும் என்பதோ எந்த வகையில் எதிர்பார்க்கத்தக்கதாக இருக்கும்?

அதுமட்டுமல்ல, சு.கட்சி-ஜே.வி.பி. கூட்டணிக்கு வாக்களிக்கப் போகின்றவர்களும், சமாதானத்திற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டவர்களாகவே இருப்பர் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாததொன்று. ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவினால் சமாதானத்தைக் கொண்டுவர முடியும் என்ற எண்ணப்பாட்டுடன் எவருமே இக்கூட்டணிக்கு வாக்களிக்கப்போவதில்லை. யுத்தம் ஒன்றிற்கு ஆணை வழங்குவதாகவே இவ்வாக்காளர்களினால் கருதப்பட்டு வாக்களிக்கப்படும்.

இந்நிலையில், சனாதிபதி சந்திரிகா யுத்தநிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை என்பன குறித்து எந்தளவிற்கு வலியுறுத்திப்பேசினும் அது நம்பகத் தன்மை கொண்டதாக இருக்கப் போவதில்லை. இந்நிலையில், சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளும் யுத்தநிறுத்த உடன்பாட்டுச் சரத்துக்களை முடக்குபவையாக இருக்கையில், யுத்தநிறுத்த உடன்பாடு என்பது கேள்விக்குரியதாக மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆகையினால், தற்பொழுது அமுலில் இருக்கும் யுத்த நிறுத்த உடன்பாடு குறித்துத் திருப்தி கொள்வதற்கு எதுவுமே இல்லை. நெருக்கடியானதொரு கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் யுத்தநிறுத்தமானது எத்தனை காலத்திற்கு நீடிப்பதாக இருக்கும் என்பதை சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளே தீர்மானிப்பதாக இருக்கும். விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்தநிறுத்த உடன்பாட்டை முறித்துக்கொள்ளும் நோக்கம் எதையும் கொண்டிராதபடியால் சனாதிபதி சந்திரிகாவே யுத்தநிறுத்தத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பவராக இருப்பார்.

# வரும் பொதுத்தேர்தலில் முஸ்லிம் மக்கள் சனாதிபதிக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும்

## -அ.இ.முஸ்லிம் லீக் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் தமது முழுமையான எதிர்ப்பை சனாதிபதிக்குத் தெரிவிக்க வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் லீக் பகிரங்க அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை அமைச்சர் பதவியில் இருந்து சனாதிபதி நீக்கியமை அடிப்படையற்றதாகும்.

இப்பதவியில் இருந்து அகற்றியமைக்கு எக்காரணமும் இல்லையெனவும் இம்தியாஸ் ஒரு முஸ் லிம் ஆகும்.

இந்நிலையில் சனாதிபதி மேற்கொண்ட முடிவானது களுத்துறையில் வாழ்கின்ற முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களை வெறுக்கும் செயலாகும் என மேலும் தெரி வித்துள்ளது.

எனவே வடகிழக்கு தென்னிலங்கை முஸ்லிம்கள் எதிர் வரும பொதுத் தேர்தலில் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டுமென அவ் லீக் கோரிக்கை விடுத்துள்ளது. (32)

# உதயசூரியன் சின்னத்தைப் பாவிக்க தடைவரின் வெளிச்சவீடு சின்னத்தில் போட்டியிடுவோம்

## ரெலோ ஏற்பாடு செய்தது

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான விண்ணப்பத்தை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளதாக ரெலோ அறி வித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தை தமிழ்க் கூட்டமைப்பு பயன்படுத்த முடியாதவாறு அக்கட்சியின் தலைவர் ஆனந்த சங்கரி தடை உத்தரவு பிறப்பித்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விடுதலை இயக்கத்தின் வெளிச்சவீடு சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஏற்ற தாகவே இவ்விண்ணப்பம் சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்துள்ளார்.

# சனாதிபதியால் தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலென்கிறார் சாலிய பண்டார

(கொழும்பு)

பொதுத்தேர்தல் பணிகளில் ஈடு படாது தடுக்கவும் என்னை சிறையில் அடைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது. எனவே எனது பாதுகாப்பை உறுதி செய்ய வேண் டும் என மத்திய மாகாண சுகாதார அமைச்சர் சாலிய பண்டார திஸாநாயக்கா சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலப்பனையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் வலப்பனைப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சனாதிபதி என்னைச் சிறையில் அடைக்கவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஈடுபடாது தடுக்க வும், நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே எனது பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும். இச் சபையின் தலைவர் சனாதிபதியுடன் தொடர்பு கொண்டு இதுபற்றிய உண்மை நிலையைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# தற்போதைய பொதுத்தேர்தலுக்கு நியாயமான காரணமெதுவுமில்லை

## -இன்ரநஷனல் டிரான்ஸ் பரன்சி கவலை

(கொழும்பு)

சிறிலங்காவில் அவசரமான தேர்தலுக்கு நியாயமான காரணம் எவையுமில்லையென இன்ரநஷனல் டிரான்ஸ்பரன்சி என்ற அமைப்பு கவலை தெரிவித் துள்ளது.

நான்கு வருடத்தில் மூன்று முறை தேர்தலால் மக்களுக்குப் பெரும் பொருளாதாரச் சுமை ஏற்பட்டுள்ளது.

நான்கு வருடத்துக்குள் மூன்று முறை தேர்தல் நடைபெறுவதால் பொருளாதாரம் நியாயமற்ற முறையில் விரயமாக்கப்படுவதால் இந்நாட்டின் பொருளாதாரத் திற்கு ஏற்படும் தாக்கம் பற்றி இந் நிறுவனம் பொது மக்களுக்கு ஞாபகம் ஊட்ட விரும்புகின்றது.

குறுகிய அரசியல் இலாபத் திற்காக தேர்தலைப் பயன் படுத்தக் கூடாதென இலங்கை டிரான்ஸ்பரன்சி இன்ர நஷனல் நிறுவனம் திடமாகக் கூறிக்கொள் வதாகவும் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

சிறந்த அரச நிர்வாகத் திறமை, தேசிய பொருளாதாரம் உட்பட இந்நாட்டின் அனைத்து வளங்களையும் பாதுகாக்க தகுந்த அரசியல் தீர்வு காண வேண்டியது மிகமிக அவசியமாகும்.

தேர்தல் செயற்பாடுகளை முறையற்ற வழியில் பயன் படுத்துவதால் இந்நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்படும் விளைவுகளைக் கணிப்பீடு செய்ய இயலாது. எனவே அவசரமான தேர்தல் ஒன்றை நடத்துவதில் எந்த விதமான நியாயமான காரணங்களும் இல்லை என்பது தெட்டத் தெளிவாக விளங்குகின்றது என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள வரை நன்கொடைகள் தடையின்றிக்கிடைக்கும்

## -சிறிலங்கா அரசு நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்த நிறுத்தம் அமுலில் உள்ளவரை வெளிநாடுகளின் நன்கொடைகள் தடையின்றிக் கிடைக்குமென சிறிலங்கா அரசு கூறியுள்ளது.

இதை நன்கொடை வழங்கும் நாடுகளதும் அமைச்சுக்களினதும் முகவர்கள் உறுதிசெய்துள்ளனர் என்றும் அரச செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி ஜோன் கடாமி தெரிவிக்கையில், நடைபெறப் போகும் பொதுத் தேர்தல் மூலம் புதிய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறும்வரை பாரிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களும் பொருளாதார சீர்திருத்த முயற்சிகளும் ஸ்தம்பிதம் அடையலாம் என எச்சரித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் டோக்கியோவில் நடைபெற்ற மாநாட்டில் இந் நாடுகள் 45 ஆயிரம் கோடி ரூபா வழங்குவதாகக் கூறியமை தெரிந்ததே.

# நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர்

வடமராட்சி வடக்குக் கடற் பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இரண்டு இந்திய மீன்பிடிப் படகுகளது ஓட்டிகள் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட் டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்றைய தினம் பருத்தித்துறைப் பொலிசாரால் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டிருந்த நிலையில் இவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதவான் பிறப்பித்துள்ளார். (27)

# சிறிலங்காவில் நிச்சயமற்ற நிலையில் நிதி உதவிகிடைப்பது தாமதமாகும்

## - மூத்த ஐ.நா.அதிகாரி தெரிவிப்பு

சிறிலங்காவில் நிலவும் நிச்சயமற்ற அரசியல் சூழல் நாட்டின் சமாதான முயற்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய நிதி உதவிகளைக் கூடுதலாகத் தாமதிக்குமென மூத்த ஐ.நா.மன்ற அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்குப் பகுதியில் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் நான்கு இலட்சம் மக்களின் அவலங்களைக் கவனத்திலெடுக்காது புறக்கணிக்கக் கூடாது என ஐ.நா மன்ற அகதிகள் அமைப்பின் செயற்குழுத் தலைவரான ஜோன் மாக்புந்தாரி கூறியுள்ளார்.

அவர் மேலும் இது தொடர்பாகக் கூறுகையில்; நிதி உதவி வழங்கும் நாடுகள் இனிமேல் தயங்குவார்கள் என்பதில் நிதியுதவி கிடைப்பது தாமதமாகுமோ என்றுதான் கவலை கொள்வதாக அவர் தெரிவித்தார். புலம் பெயர்ந்து வாழ்பவர்களில் நிதி உதவி தேவை என்பவர்களில் சிலருக்கு அது கிடைக்காமல் போகலாம் என்றும் அவர் கூறினார்.

தென்னிந்தியாவில் முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கை அகதிகளை நாடுதிருப்பும் முயற்சிகளும் சமாதான நடவடிக்கைகள் போலவே முடங்கிக் கிடப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஐ.ம.சு.மு.சின்னமாக வெற்றிலை அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதியசின்னமாக வெற்றிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதலில் இந்தப் புதிய கூட்டணிக்கு தாமரைச் சின்னம் என அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது தேர்தல் ஆணையாளர் இந்த புதிய கூட்டமைப்பின் சின்னமாக வெற்றிலை அங்கீகரித்துள்ளதாக கூட்டமைப்பின் தலைமைச் செயலகர் சுசில் ஜயந்தப்பிரிய தெரிவித்துள்ளார்.

# சோனியா– கருணாநிதி சந்தித்துப் பேச்சு

தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் மு.கருணாநிதியை இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு நேற்று வெள் ளிக்கிழமை நிகழ்ந்துள்ளது.

காங்கிரஸ் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் இருபத்தியிரண்டு வருடங்களுக்குப் பின்னர் தேர்தல் கூட்டணி ஏற்பட்ட பின்னர் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்தச்சந்திப்பு தி.மு.க.தலைமையகத்தில் 45 நிமிடம் வரை இடம் பெற்றது.

பாண்டிச்சேரித் தொகுதியை பாட்டாளிமக்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டதை அடுத்து காங்கிரஸ் கட்சிக்கு அதிருப்தி நிலவிய நிலையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. இதன்போது பாண்டிச்சேரி குறித்துதான் பேசியதாகவும் இன்னும் இரண்டு நாட்களில் தீர்வு ஏற்பட்டுவிடும் என்றும் அவர் கூறி உள்ளார்.

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நலன்காக்கும் திட்டம்

## த.பு. கழகம், யுனிசெவ் இணைந்து நடைமுறை

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான நலன் காக்கும் திட்டம் ஒன்றை தமிழர்புனர்வாழ்வுக்கழகம் யுனிசெப் நிறுவனம் ஆகியன இணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இதன் முதற்கட்டமாக கிளி. வலயக்கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கு இச்செயல்திட்டம் சம்பந்தமான விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது. இதன்படி கடந்த ஆறாம் திகதி பளை மத்திய கல்லூரியிலும், ஏழாம் திகதி கண்டாவளை, தருமபுரம் மகாவித்தியாலயம் என்பவற்றில் நடைபெற்றது.

மேற்குறித்த திட்டத்தின் தொடர்ச்சியாக இன்று கரைச்சி வலயக் கல்விப்பணிமனையிலும் 20ஆம் திகதி பூநகரி மகாவித்தியாலயத்திலும், 21ஆம் திகதி ஜெயபுரம் அ.த.க.பாடசாலையிலும் நடைபெறஉள்ளது. இந்த விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறையின் போது இலங்கையின் வடகிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான சிறந்த வாழ்க்கை நிலையை உருவாக்குவது பற்றி விளக்கமளிக்கப்பட்டு அது பற்றி ஆராயப்படவுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

# உள்ளூராட்சி மன்றங்களின் கணக்காய்வுக்குத் தடை

குடாநாட்டிலுள்ள பல உள்ளூராட்சி மன்றங்களும் கணக்காய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு போதிய ஒத்துழைப்புக்களை நல்கவில்லையெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக கணக்காய்வு நடவடிக்கைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டிருந்த நிதி மற்றும் நிர்வாக நடைமுறைகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கான விடைகளை அவை தரப் பின்னடிப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வட-கிழக்கு மாகாணப் பிரதிப்பிரதம கணக்காய்வாளர் அலுவலகம் உரிய தரப்புகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது. குறிப்பாக ஈ.பி.டி.பி. மற்றும் புளொட் அமைப்புக்களின் உறுப்பினர்களை தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக கொண்டியங்கிய சபைகள் சில தொடர்பாகவே கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடிதம் மூலம் இது தொடர்பான யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரது கவனத்திற்குக் கொணடுவந்துள்ள கணக்காய்வுத்திணைக்களம் கடந்த கால கணக்கீடுகள் தொடர்பான ஐய வினாக்களுக்கான பதில்களை உரிய சபைகள் வழங்காதுள்ளதால் தமது கணக்காய்வுப் பணிகளைப் பூரணப்படுத்த முடியாதிருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கடந்த ஆண்டின் இறுதிவரையுள்ள கணக்கீடுகள் தொடர்பான கணக்காய்வுகளே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

# விளையாட்டு போட்டி

மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான பெரு விளையாட்டுப் போட்டி இன்று முதல் வரும் சனிக்கிழமை வரை நடைபெறுமென மாந்தை கிழக்கு விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் மாவை ஜெயபிரதாஜ் தெரிவித்துள்ளார். (24)

# ரயில்வே கட்டணம் அதிகரிக்கும்

ரயில்வே கட்டணங்கள் அடுத்து வரும் சில தினங்களில் மேலும் 10 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக ரயில்வே அதிகார சபையின் தலைவர் மனதுங்க கூறியுள்ளார்.

அண்மையில் 40 சதவீதமாக அதிகரிக்கப்பட்டரயில்வே கட்டணம் இன்னும் 10 சதவீதம் அதிகரித்து 50 சதவீதமாக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 60சதவீதமாக அண்மையில் அதிகரிக்கப்பட்ட மற்றைய ரயில்வேக் கட்டணம் 10 சதவீதம் குறைக்கப்பட்டு 50 சதவீதமாகக் குறைந்துள்ளது.

# தூங்கிய நிலையில் ஆணின் சடலம்

வாணர்மடம் சுருபத்தடியில் ஒரு ஆணின் சடலம் தூங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது. இவர் சுமார்35-45 வயது மதிக்கத்தக்கவர். இவர் மெல்லிய நீல நிறச் சேட்டும் பச்சை மஞ்சள் நீலம் கலந்த பெட்டிச்சரமும் பச்சைநிறத் துவாயும் அணிந்திருந்தார். இவரது உறவினரோ அல்லது இவர் தொடர்பான விபரம் தெரிந்தவரோ புதுக்குடியிருப்பு காவல் பணிமனையில் தொடர்பு கொள்ளவும்.

# பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பொலித்தீன் பாவனைக்குத்தடை

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பொலித்தீன் பாவனையானது வரும் 16ஆம் திகதியில் இருந்து முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது. இவ்விடயம் சம்பந்தமாக பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள சகல உணவகங்களுக்கும் பிரதேச சபையால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே உணவகங்களில் லஞ்சீற் மாற்றீடாக தாமரை இலை, வாழைஇலை, வாழைத்தடல் போன்றவற்றைப் பாவிக்க வேண்டும் என்றும் கொதித்தாறிய நீரினால் பாத்திரங்களைத் துப்புரவு செய்து பாவிக்கும்படியும் கொதித்து ஆறிய நீரைக் குடிப்பதற்குப் கொடுக்கும்படியும் பிரதேசபையால் உணவக உரிமையாளர்களுக்கு பிரதேசத்தின் நலன் கருதி வேண்டப்பட்டுள்ளது. வேண்டுகோளை சகல உணவக உரிமையாளர்களும் கையாண்டு 01.03.2004 லஞ்சீற்றை முற்றாகத் தடைசெய்யும் படி பிரதேச சபைச் செயலாளர் இ.து. சிவராசா கேட்டுள்ளார்.

# அரச துறையில் புதியநியமனங்கள் தேர்தல் முடியும்வரை தடை

(கொழும்பு)

பெப்ரவரி மாதம் எட்டாம்திகதி முதல் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி வரை அரச துறையில் எந்தவொரு நியமனங்களையும் பதவியுயர்வுகளையும் வழங்கக் கூடாதென சனாதிபதி சகல அமைச்சர்களின் செயலாளர்களுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார்.

இதேவேளை இந்தக் காலப் பகுதியில் ஏதாவது நியமனங்களோ பதவியுயர்வுகளோ வழங்கப்பட்டால் அவை உடனடியாக இரத்துச் செய்யப்படும் எனவும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

சனாதிபதியின் செயலாளர் கருணாரத்ன இதுதொடர்பாக நேற்று முன்தினம் அனுப்பிவைத்த கடிதத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அமைச்சரவை அல்லது அரச வேலைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பூரண அனுமதியுடன் ஏதோவொரு நியமனமோ அன்றி பதவியுயர்வோ வழங்கப்பட்டிருப்பின் அது சம்பந்தமாக பின்னர் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் வரை நடைமுறையில் இருக்குமென்றும் சனாதிபதி தனது கட்டளையில் குறிப்பிட்டுள்ளார்.

முகாமைத்துவ சேவைகள் தொடர்பான 16ஆம் இலக்கச் சுற்றுநிருபத்திற்கு ஏற்புடையதான நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் என்பன சட்டவிரோதமானவையாகும். இத்தகைய நியமனங்கள் அல்லது பதவியுயர்வுகள் தொடர்பாக குறித்த அமைச்சு செயலாளர்கள் தனிப்பட்ட முறையில் பதிலளித்தல் வேண்டும்.

இந்தக் கட்டளை அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் உட்பட அரசின் ஏனைய நிறுவனங்கள் மற்றும் சகல பதவிகள் தொடர்பாகவும் நடைமுறையில் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சமுர்த்தி அதிகார சபை, இலங்கைத் தேயிலைச் சபை, மற்றும் அரச வங்கி கள் உட்பட பல்வேறு அரச நிறுவனங்களில் சட்ட விரோத ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றுள்ளதாக அறியக் கிடைத்துள்ளதென சிறிலங்கா சுதந்திரக்கட்சி அறிக்கை விடுத்துள்ளது.

இவற்றிற்கு எதிராக புதிய கூட்டணி அரசு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருடப்பட்ட 23 சைக்கிள்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் அண்மைக்காலத்தில் திருட்டுப்போன 23 சைக்கிள்களை திருமலைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இவற்றில் 2சைக்கிள்கள் தொடர்பாகவே அவற்றின் உரிமையாளர்கள் திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர். ஏனைய கைப்பற்றப்பட்ட சைக்கிள்கள் தொடர்பாக அவற்றின் உரிமையாளர்கள் முறைப்பாடு பதிவுசெய்யப்படவில்லை என்று திருகோணமலைப் பொலிஸ் தலைமைக் காரியாலய இஸ்பெக்ரர் நிஸந்த திஸநாயக்க தெரிவித்தார். இச்சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பாக தவராசா என்ற நபர் கைது செய்யப்பட்டார். இதுபோன்ற குற்றச் செயல்களுக்காக இவர் பல தடவைகள் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார். ஆறுமாதங்களுக்கு முன்னரே இந்த நபர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அதன் பின்னரே இச்சைக்கிள் திருட்டில் சம்பந்தப்பட்டவர் என்று பொலிசார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட சைக்கிள்கள் தற்போது பொலிஸ்நிலையத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சைக்கிள்களை பறிகொடுத்தவர்கள் கைப்பற்றப்பட்ட சைக்கிள்களைப் பார்வையிடலாம் என்று பொலிசார் தெரிவித்தனர். (25)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு முக்கிய கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற உள்ளதால் பதிவினை மேற்கொள்ளாத வேலையற்ற பட்டதாரிகள் உள்ளடங்க அனைத்து வேலையற்ற பட்தாரிகளையும் சமுகம் தருமாறு முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது. (26)

### பெற்றோல்..

னால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணை டீசல் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் எதுவும் இல்லையெனவும் பெற்றோலியக்கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

### தமிழ்ச்செல்வன்..

இராஜதந்திரிகள், இத்தாலி அமைச்சர்கள் ஆகியோரைச் சந்தித்து மக்களின் பிரச்சினைகள் உட்பட்ட பல் வேறுபட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்த இவர்கள் நாளைய தினம் கிளிநொச்சியை வந்தடையவுள்ளனர். (லோ)

### பொ.ஐ.மு...

மையை ஆட்சேபித்து ஆணைக்குழுவின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன் றையும் நேற்றுநடத்தினர்.

இதேவேளை தமக்கு எதிரான முறைப்பாடுகள் அடிப்படையற்றவை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (32)

### பிடிக்கப்பட்ட..

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்க உத்தரவிட்ட நீதவான், எஞ்சியவர்களையே உடன்விடுவிக்கப் பணித்திருந்தார்.

நீதவானின் உத்தரவையடுத்து விடுவிக்கப்பட்ட 22இந்திய மீனவர்களையும், இலங்கை கடற்படையூடாக இந்திய கடற்படையிடம் கையளிக்க ஏதுவாக பருத்தித்துறைப் பொலிஸார் விசேட வாகனம் மூலம் காங்கேசன்துறை கடற்படைத்தளத்திற்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

இதேவேளை பிடிக்கப்பட்டிருந்த இந்தியமீனவர்களில் மேலும் இரு படகுகளின் ஓட்டிகள் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு, யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

### வடக்கு...

கியூலோஅன்டி றோயிற்றுவும் கூட இருந்தார்.

வடக்கு கிழக்கின் தற்போதைய சூழ்நிலை தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் கொழும்பிலுள்ள அரசியல் நெருக்கடியில் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து தமிழ்ச் செல்வன் அவர்கள் எடுத்துக்கூறினார். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை புலிகள் கடைப்பிடிக்க வேண்டும் என சென்றற் கோரிக்கை விடுத்தபோது புலிகள் மீண்டும் யுத்தத்திற்கு திரும்பமாட்டார்கள் என தமிழ்ச்செல்வன் அவர்கள் மீண்டும் உறுதியளித்தார். வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் சமாதான முயற்சிகள் குறித்து விரக்தி நிலைக்குத் தள்ளப்பட சர்வதேச சமூகம் அனுமதிக்கக்கூடாது என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.